**செய்தி வெளியீடு எண்: 17/2022** **நாள்: 08.03.2022**

**பத்திரிக்கை செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஜியோ இந்தியா அறக்கட்டளையுடன் இணைந்து, சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் வகையில் “வொண்டர் வுமன் ஃபெஸ்ட்” என்ற கருப்பொருளை மையமாக கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் இன்று (08.03.2022) நடைபெற்றது.

**நடைப்போட்டி**

மகளிர் தினக் கொண்டாட்டத்தின் போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் 900 மீட்டர் தூரம் நடைப்போட்டி நடைபெற்றது. இதில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் 200 உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குனர் திருமதி. சுஜாதா ஜெயராஜ் (நிதி), மற்றும் ரோட்டரி கிளப்பின் முதல் பெண்மணி திருமதி. புனிதா ஸ்ரீதர் கொடியசைத்து இந்த நகைப்போட்டியை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

**ஊரக வளர்ச்சி மையத்திற்கான சானிட்டரி நாப்கின் தயாரிக்கும் இயந்திரம் அறிமுகம்**

வொண்டர் வுமன் கேர் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஜியோ இந்தியா அறக்கட்டளை மற்றும் திருவான்மியூர் ரோட்டரி கிளப்புடன் இணைந்து செங்கல்பட்டு மாவட்டம், பழங்குடி சமூக மக்கள் கிராமப்புற மேம்பாட்டு மையத்திற்காக சானிட்டரி நாப்கின் தயாரிக்கும் இயந்திரத்தை அறிமுகப்படுத்தியது.

சென்னை திருவான்மியூர் ரோட்டரி கிளப் மற்றும் ஜியோ இந்தியா அறக்கட்டளையின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முன்னிலையில் தமிழ்நாடு மகளிர் ஆணைய தலைவர் திருமதி. ஏ.எஸ்.குமாரி மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குனர் திருமதி. சுஜாதா ஜெயராஜ் (நிதி), ஆகியோர் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் இந்த இயந்திரத்தை தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் தமிழ்த் திரைப்படத்துறை நடிகர் திரு.சந்தோஷ் பிரதாப் உடனிருந்தார்.

**மருத்துவ முகாம்**

மேலும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் நலனுக்காக இலவச மருத்துவ

முகாம் நடத்தப்பட்டது. மருத்துவ முகாமில், பொது மருத்துவம், பல் மருத்துவம், மகளிர் நோய் மருத்துவம் ஆகிய பிரிவுகள் இருந்தன. மாதவிடாய் சுகாதார விழிப்புணர்வின் ஒரு பகுதியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பெண் ஊழியர்களுக்கு சானிட்டரி நாப்கின்கள் விநியோகிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டு மகளிர் தின கொண்டாட்டங்களை மாபெரும் வெற்றியடையச் செய்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**